THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Saturday, the 5th May 1962.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (the **Hon. Sri S. CHELLAPANDIAN**) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Madras and Madurai Cities (Classification)

* 27 *Q.*—**Sri M. KARUNANITHI :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னையை "ஏ" பிரிவு நகரமாகவும், மதுரையை "பி" பிரிவு நகரமாகவும் மாற்றிடும் முயற்சி எந்தக் கட்டத்திலிருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The State Government are not directly concerned with the classification of Madras and Madurai as 'A' and 'B' Class City respectively. The classification is intended to regulate the allowance of Central Government employees stationed in these Cities and hence it is a matter for the Government of India to decide. This Government do not consider it appropriate to advise the Government of India in this regard.

Sri M. KARUNANITHI : ஜனத்தொகை அடிப்படையிலே, சென்னை நகரிலே போதுமான ஜனத்தொகை இல்லை என்ற காரணத்தைக் காட்டி, இதை ஏ-பிரிவாக ஆக்குகின்ற திட்டம் தயக்கம் செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அவ்வாறுதான் நான் கருதுகிறேன்.

Sri M. KARUNANITHI : 'ஏ', 'பி', 'ஸி' என்ற அடிப்படையில் நகரங்கள் பிரிக்கப்படுவது, மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும், வேறு பல சிப்பந்திகளுக்கும் வீட்டு வாடகை அலவன்ஸ், நகர அலவன்ஸ் இவைகளை உயர்த்துவதற்காக என்பது நாம் அறிந்த விஷயம். அந்த வகையில், சென்னை நகரைப் பொறுத்தமட்டில் 1954-க்குப் பிறகு, 47 சத விகிதம் வாழ்க்கைச் செலவு உயர்ந்திருக்கிறது. கல்கத்தா, பம்பாய், டெல்லி போன்ற நகரங்களில் 20 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. வாழ்க்கைச் செலவு அடிப்படையிலே இதை ஏ-பிரிவு நகரமாக உயர்த்துவதற்கு சர்க்கார் யோசனை கூறுவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த ஏ, பி, ஸி, என்ற பாகுபாடு இந்த அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் இல்லை. இந்தக் கேள்வி பார்லிமெண்டில் போடப்படவேண்டும்.

[5th May 1962

SRI V. KRISHNAMOORTHY : மத்திய சர்க்கார்தான் சென்னை நகரத்தை ஏ-பிரிவாக ஆக்கவேண்டுமென்று பதில் அளித்த போதிலும், வாழ்க்கைச் செலவு உயர்ந்திருக்கிற காரணத்தினுல், மத்திய சர்க்காரை இந்த மாநில சர்க்கார் ஏன் வற்புறுத்தக் கூடாது என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மத்திய அரசாங்கம் வேறு, ராஜ்ய அரசாங்கம் வேறு. மத்திய அரசாங்கம் அவர்களிடம் ஊழியம் செய்கிற உத்தியோகஸ்தர்களுக்கு தங்களுடைய நிதியிலிருந்து சம்பளம் கொடுக்கிருர்கள். இந்த மாநில அரசாங்கம் அதில் தலையிடுவது முறை அல்ல.

SRI V. R. NEDUNCHEZHIYAN : சென்னை நகரம் பொறுத்த வரையில் போதுமான அளவுக்கு மக்கள் தொகை இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆனுல் சென்னையைச் சுற்றியுள்ள 5-மைல் சுற்றளவுக்கு மக்கள் குடியிருக்கின்ற காரணத்தினுல், சென்னையில் ஏற்படுகிற நெருக்கடிகள் அவர்களையும் பாதிப்பதால், 5-மைல் சுற்றளவில் குடி இருக்கும் அனைவரையும் சேர்த்து, இதை ஏ-பிரிவாக ஆக்குகின்ற அளவுக்கு டெல்லி சர்க்காரிடம் நமது மாநில சர்க்கார் வற்புறுத்தி எடுத்துச் சொல்ல முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விஷயத்தைப் பற்றி இந்த அரசாங்கம் யோசனை கூறுவது முறையல்ல. இந்தக் கேள்வி பார்லிமெண்ட்டில் கேட்கப்படவேண்டும்.

SRI K. A. MATHIALAGAN : இந்தப் பிரச்னையைக் குறித்து, நம்முடைய முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும், மத்திய ஊழியர்களின் நலனை முன்னிட்டும், வேறு தொழிலாளர்கள், மாநில ஊழியர்கள் ஆகியவர்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்கிற வகையில், இதை வற்புறுத்தத் தவறியிருக்கிருர்கள் என்பது உண்மையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தப் பிரச்னைக்கு இடமில்லை. கனம் அங்கத்தினர்கள் ஏதோ காரணத்தினுல் இதைப்பற்றி அதிகமான அளவுக்கு அக்கறை காட்டுகிருர்கள். கனம் அங்கத்தினர்கள் காட்டும் அக்கறையைவிட, முதல் அமைச்சர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஊழியர்களிடத்தில் இருக்கும் அக்கறை ஒன்றும் குறைவு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI M. S. MANI : சென்னை நகரத்தில் சரிவர மக்கள் கணக்கெடுப்பு எடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது உண்மையல்ல என்று நான் கூறுவேன்.

5th May 1962]

SRI M. KALYANASUNDARAM: மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு நகர வாழ்வுப்படி கொடுப்பதற்காக ஏற்பட்ட பிரச்னை இது. சென்னை நகரைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் நிர்ணயித்திருக்கிற அடிப்படை தவறு என்று நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் எடுத்துக் கூறுவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் கூறுகிற அடிப்படை மத்திய ஆட்சியில் ஊழியம் பெறுகிறவர்களுக்குச் சம்பளம் முறை, அலவன்ஸ் முறையைப் பொறுத்தது. இதில் மாநில அரசாங்கம் தலையிடுவது சரியல்ல என்று மீண்டும் கூறுகிறேன்.

SRI V. KRISHNAMOORTHY: கனம் அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தையும், மாநில அரசாங்கத்தையும் ஏதோ இரண்டு வேறுபட்ட அரசாங்கங்கள் என்று கூறுகிறார்கள். இந்த மாநிலத்தில் வேலை செய்கிற ஊழியர்களின் நலனைப் பாதுகாப்பதும் மாநில சர்க்காரின் கடமை. ஆகவே அந்தக் கடமையைச் செய்யும் வகையில் ஏன் இதை வற்புறுத்தக்கூடாது என்று மீண்டும் கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்த அரசாங்கம் வேறு, அந்த அரசாங்கம் வேறு என்று கூறுவதிலே நான் சற்றும் தயங்கவில்லை. இதற்கும் 'ஸாவரென்டி' (Sovereignty) இருக்கிறது. அதற்கும் 'ஸாவரென்டி' இருக்கிறது. மத்திய அரசாங்க ஊழியர்களைப்பற்றி இந்த அரசாங்கம் எடுத்துக் கூறுவது முறையல்ல. அந்த ஊழியர்களின் நலன்கள் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பு. ஒவ்வொரு மாநில அரசாங்கமும் தங்கள் தங்கள் இஷ்டம்போல் தலையிடுவது சரியல்ல.

SRI K. A. MATHIALAGAN: இந்த சட்டசபையில் ஒரு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றினால், அதை சர்க்கார் கவனிப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்த சபையில் கனம் அங்கத்தினர் அவர்களோ, அவர் கட்சியைச் சேர்ந்தவர்களோ அவ்வாறு தீர்மானம் கொண்டு வந்தால், அதை சர்க்கார் ஏற்றுக் கொள்ளாது.

SRI M. KALYANASUNDARAM: அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது, மத்திய அரசாங்கம் வேறு, ராஜ்ய அரசாங்கம் வேறு என்று அழுத்தமாகக் கூறினார்கள். இனி மத்திய அரசாங்க ஊழியர் வேலை நிறுத்தம் செய்தால் ராஜ்ய அரசாங்கம் போலீஸ் அனுப்பாமல் இருப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அந்தப் பிரச்னை வேறு. அது "லா அண்டு ஆர்டர்" பிரச்னை. முற்றிலும் இந்த அரசாங்கத்தினுடையது. மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாக

[5th May 1962

இருந்தாலும் சரி, அல்லது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, "லா அண்டு ஆர்டர்" இந்த அரசாங்கத்தின் பொறுப்பு.

SRI K. S. MANI : மத்திய அரசாங்கம் வேறு, மாநில அரசாங்கம் வேறு என்று சொல்வதிலிருந்து மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் சம்பந்தமே இல்லை என்று கூறுகிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினருக்குத் தமிழ் தெரியுமென்று நினைக்கிறேன். இந்த அரசாங்கம் வேறு, மத்திய அரசாங்கம் வேறு. அதற்காகத்தான், தனித் தனி "ஸாவரெண்டி" என்று ஆங்கில வார்த்தையை உபயோகிக்கிறேன். எனவே சம்பந்தமில்லை என்று சொல்லுவது முறை அல்ல.

SRI P. K. MOOKKIAH THEVAR : ஏ, பி. ஸி நகரங்கள் எந்த அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஜனத்தொகை அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன.

THE HON. SRI K. KAMARAJ : இந்தப் பிரச்னையில் பரிகாரம் தேடுவதற்கு வழியிருக்கிறது. அந்த வழியை அரசாங்கத்தார் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலே ஒரு சரியான முடிவு எடுத்ததற்குப் பின்னர் இதைப் பற்றி அறிவிக்கப்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Sigur Road

*28 Q.—SRI J. MATHA GOWDER : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிகூர் பாதையை பெரும்வழி துறையினர் மேற்கொள்ளும் உத்தேசமுண்டா ?

(இ) ஆம் என்றால், எப்போது முதல் ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) & (இ) Ootacamund-Mysore road *via* Sigur from mile 6/2 to 18/0 has been taken over by the Highways and Rural Works Department from the control of Ootacamund Panchayat Union with effect from 1st April 1962.

Kathabetty-Iduhatty Road

*30 Q.—SRI J. MATHA GOWDER : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லாவில் கட்டபெட்டு-இடுஹட்டி பாதையை பெரும்வழி துறையினர் மேற்கொள்ளும் உத்தேசமுண்டா ?